Thalaivaasal

# தலைவாசல்

Thalaivaasal

எங்கள் பாரம்பரியம்

வீடு 01 வாசல் 61 | thalaivaasaltv@gmail.com | வியாழக்கிழமை | டிசம்பர் 03, 2020


## வெள்ளத்தில் சிக்கிய இளைஞர் உயிரிழப்பு கொடிகாமத்தில் சம்பவம்

தென்மராட்சி கொடிகாமம் பகுதியில் நபர் ஒருவர், வீதி வெள்ளத்தில் வீழ்ந்து கிடந்த நிலையில் அவரை மீட்டு, வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதித்த நிலையில் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

03

## புயலின் பின்னும் தொடரும் மழை: யாழில் 9346 குடும்பங்களை சேர்ந்த 31703 பேர் பாதிப்பு

யாழ்.மாவட்டத்தில் மாலை 6.30 மணிவரையான தகவல்களின் பிரகாரம் 9346 குடும்பங்களை சேர்ந்த சுமார் 31 ஆயிரத்து 703 பேர் பாதிக்கப்பட்டிருப்பதாக அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவி பணிப்பாளர் ரீ.என்.சூரியராஜா கூறியுள்ளார்.

அத்தோடு யாழ்.மாவட்டத்தில் தற்போது 32 இடைத்தங்கல் முகாம்கள்

03



# புரட்டிப் போட்டது புரெவி

- 40 ஆயிரம் பேர் பாதிப்பு
- ஒருவர் உயிரிழப்பு
- 4 பேர் காயம்
- ஒருவரைக் காணவில்லை
- 79 முகாம்களில் 11 ஆயிரம் பேர்
- சுமார் 2500 வீடுகள் பகுதியளவில் சேதம்

புரவி சூறாவளி காரணமாக ஏற்பட்டுள்ள சீரற்ற வானிலையால் இதுவரை 6 மாவட்டங்களைச் சேர்ந்த 40 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், ஒருவர் உயிரிழந்துள்ளதோடு ஒருவர் காணாமல் போயுள்ளதாகவும், 4 பேர் காயமடைந்துள்ளதாகவும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட 2,911 குடும்பங்களைச் சேர்ந்த, 10,336 பேர் 79 பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

03

## இரணைதீவில் 131 பேர் சிக்கித்தவிப்பு! உதவிக்கு இராணுவத்தை அழைக்க திட்டம்

தொழில் நிமித்தமாக இரணை தீவுக்கு சென்றிருந்த 131 பேர் கரை திரும்பமுடியாது சிக்கித்தவித்து வருகின்றனர்.

கிளிநொச்சி பூநகரி இரணைதீவு பகுதியில் 131பேர் இரண்டு இடங்களிலே தங்கியிருப்பதாகவும். அவர்களிற்க உடனடி உதவி பொருட்களை வழங்க விமானப்படையின் உதவியை கோரவுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வர் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் மழை மற்றும் காற்று என்பவற்றினால்

03

## கிளைமோர் குண்டுடன் பெண்ணொருவர் கைது சிங்கள ஊடகம் தகவல்

குழந்தையுடன் கிளைமோர் குண்டொன்றை கொண்டு சென்ற தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் பெண் உறுப்பினர் மற்றும் அவரது கணவர் ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளதாக சிங்கள ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதுகுறித்த செய்தியில், யாழ்ப்பாணத்திலிருந்து கண்டி நோக்கி பயணித்த பேருந்து ஒன்றில் வைத்தே,

03

## கிளிநொச்சியில் வெடிபொருட்களுடன் நால்வர் கைது

கிளிநொச்சி- பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இயக்கச்சி பகுதியில் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவர்களிடமிருந்து வெடிபொருட்களும் மீட்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி- இயக்கச்சி, பனிக்கையடி எனும் கிராமத்திலுள்ள வீடொன்றில் சில வெடிப்பொருட்கள் மறைத்து வைக்கப்பட்ட நிலையில் இராணுவத்தினரால் மீட்கப்பட்டுள்ளன.

03

## ஊரெழு பொக்கணை கிணற்றில் சூடான கடல் நீர் பாய்கிறது

ஊரெழு பொக்கணைக் கிணறு நீர்மட்டம் உயர்ந்து கடல்நீர் உள்புகுந்துள்ளதாத அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். பொக்கணை கிணறில் வழிந்தோடும் நீர் கடுமையான சூடாக உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டனர்

அத்துடன், அந்தப் பகுதியில் உள்ள குழாய்க்கிணறுகள் மற்றும் கிணறுகளும் நிலமட்டத்துக்கு மேலாக நீர்

03

## பருத்தித்துறையில் ஒருவருக்கு கொரோனா

பருத்தித்துறை ஓடக்கரையைச் சேர்ந்த ஒருவருக்கு கோரோனா தொற்று உள்ளமை இன்று (டிசெ.3) வியாழக்கிழமை கண்டறியப்பட்டுள்ளது என்று வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

தனது மாமி உறவுமுறை ஒருவரின் மருத்துவ சிகிச்சைக்காக கொழும்புக்குச் சென்று அங்கு ஒரு மாதம் தங்கியிருந்த நிலையில் வீடு திரும்பிய 34 வயதுடைய குடும்பத்தலைவருக்கே இவ்வாறு கோரோனா தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

03






தரணி எங்கும் தமிழராய் இணைவோம்





# விமான நிலையங்களை மீண்டும் திறக்கத் திட்டம்

வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் இலங்கைக்கு வருவதற்கு ஏதுவாக விமான நிலையங்களை மீண்டும் திறப்பதற்கு திட்டமிடப்பட்டிருப்பதாக அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

சுற்றுலாத்துறை அமைச்சு தொடர்பான அமைச்சுசார் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துரைத்தபோதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி சுகாதார அதிகாரிகளின் அனுமதி கிடைத்தவுடன் சுகாதார வழிகாட்டல்களுக்கு அமைய விமான நிலையங்களை திறக்க முடியும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பாக சுகாதார அமைச்சின் அதிகாரிகளுடன் கலந்துரையாடல் நடத்தப்படவிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தலைவாசல் எங்கள் பாரம்பரியம் Thalaivaasal

## தினமொரு ஆரோக்கிய தகவல்

மழை காலங்களில் பரவலடையக்கூடிய நோய்கள் தொடர்பாக அவதானமாக இருக்க வேண்டும்.

மழைகாலங்களில் சுவாச தொகுதி சம்பந்தமான நோய்கள், வயிற்றோட்டம், நெருப்புக் காய்ச்சல், நுளம்பு மூலம் பரவலடையும் டெங்கு நோய், எலிக்காய்ச்சல் போன்ற தொற்று நோய்களும் ஏற்கனவே உள்ள சுவாச சம்பந்தமான அஸ்மா போன்ற நோய்களும் உக்கிரமடையலாம்.

சரியான பாதுகாப்பு நடவடிக்கைகளினால் இவற்றைத் தடுக்கலாம்.

**வைத்தியகலாநிதி கோ.றஜீவ்**



# தமிழகத்தின் தென் மாவட்டங்களுக்கு சிவப்பு எச்சரிக்கை

தமிழகத்தின் தென் மாவட்டங்களுக்கு சிவப்பு எச்சரிக்கையை இந்திய வானிலை ஆய்வு மையம் விடுத்துள்ளது.

புரவி புயல் காரணமாக கன்னியாகுமரி, திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி, இராமநாதபுரம், சிவகங்கை ஆகிய மாவட்டங்களுக்கே இவ்வாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, குறித்த மாவட்டங்கள் உட்பட தமிழ் நாட்டின் பல பகுதிகளில் புரவி புயலை எதிர்கொள்ளும் வகையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதனிடையே, தமிழகத்தில் புரவி புயல் முன்னெச்சரிக்கை நடவடிக்கை மற்றும் நிலவும் சூழல் குறித்து முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமியிடம், பிரதமர் நரேந்திரமோடி தொலைபேசி ஊடாக ஆலோசனை நடத்தியுள்ளார்.

மேலும், அனர்த்த நிலைமையை எதிர்கொள்ளத் தேவையான அனைத்து ஆதரவையும் மத்திய அரசு வழங்கும் என பிரதமர் குறிப்பிட்டுள்ளதுடன் மக்களின் நலனுக்காகவும், பாதுகாப்புக்காகவும் தான் பிரார்த்திப்பதாகத் தெரிவித்துள்ளார்.

# வல்வெட்டித்துறையில் கடும் காற்று: 186 பேர் பாதிப்பு



யாழ்ப்பாணம்- வல்வெட்டித்துறை, ஆதிகோவிலடி பகுதியில் ஏற்பட்ட கடும் காற்று காரணமாக, சுமார் 55 குடும்பங்கள் பாதிக்கப்பட்டு, இடைந்தங்கள் முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

நேற்று (புதன்கிழமை) இரவு ஏற்பட்ட கடும் காற்று காரணமாகவே இந்த அனர்த்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

மேலும்,சுமார் 50 வீடுகள் சேதமாகியுள்ள அதேவேளை 55 குடும்பங்களை சேர்ந்த 186பேர், வல்வை முத்துமாரியம்மன் கல்யாண மண்டபத்தில் தற்போது தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, மீன்பிடி உபகரணங்கள் பல சேதமாகியுள்ளதாக குறித்த பகுதி மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

# காற்று மாசால் இந்தியாவில் நான்கரை இலட்சம் பேர் உயிரிழப்பு

நிலக்கரியை பயன்படுத்தும் அனல்மின் நிலையங்கள் உள்ளிட்டவற்றால் ஏற்படும் காற்று மாசின் காரணமாக இந்தியாவில் இதுவரை நான்கரை இலட்சத்திற்கும் அதிகமான மரணங்கள் பதிவாகியுள்ளதாக மருத்துவ இதழ் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

கடந்த 2018 ஆண்டு புள்ளி விவரப்படி நிலக்கரியால் ஏற்படும் காற்று மாசால் மட்டும் சுமார் 96 ஆயிரம் பேர் உயிரிழந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

அதாவது ஒரு மணி நேரத்தில் 10 பேர் இறப்பதாக கணக்கிடப்பட்டுள்ளது. எனவே நிலக்கரியின் உபயோகத்தை படிப்படியாக குறைக்கும் தேவை ஏற்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# ஆழ்துளைக் கிணற்றுள் வீழ்ந்த 4 வயதுச் சிறுவன்: உத்தரப் பிரதேசத்தில் மீட்புப்பணி


உத்தரபிரதேச மாநிலத்தில் நான்கு வயதுச் சிறுவன், ஆழ்துளைக் கிணற்றில் விழுந்த நிலையில் சிறுவனை மீட்கும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

மஹோபா மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயி பஹிரத் குஷ்வாஹா தம்பதிகளின் கணேந்திரா என்ற மகனே இவ்வாறு ஆழ்துளைக் கிணற்றில் விழுந்துள்ளார்.

கோதுமை வயலுக்கு குடும்பமாகச் சென்றிருந்த நிலையில், சிறுவன் விளையாடிக் கொண்டிருந்தபோதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்நிலையில், பொலிஸார் மற்றும் மீட்புப் படையினர் சிறுவனை மீட்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

குறித்த ஆழ்துளைக் கிணறு 60 அடி ஆழம் கொண்டது எனவும், தற்போது குழந்தை 30 அடி ஆழத்தில் உள்ளதாகவும் மீட்புப் படையினர் தெரிவித்துள்ளனர்.



சுமார் எட்டு மணித்தியாலங்களுக்கு மேலாக மீட்பு பணி தொடர்ந்து நடைபெற்றுவரும் நிலையில் சிறுவன் சுவாசிப்பதற்கு ஏதுவாக ஒக்சிஜன் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

தற்போதுவரை சிறுவன் நலமுடன் இருப்பதாக பொலிஸார் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# யாழில் இருந்து மட்டக்களப்பிற்கு கேரளா கஞ்சா கடத்திய இருவர் கைது

யாழ்ப்பாணத்தில் இருந்து மட்டக்களப்பிற்கு காரின் ஊடாக கேரள கஞ்சா கடத்திய இருவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பில் இன்று (வியாழக்கிழமை) அதிகாலை, குறித்த சந்தேகபர்கள் இருவரும் கைது செய்யப்பட்டதுடன் அவர்களிடமிருந்து 2 கிலோ 200 கிராம் கேரளா கஞ்சாவை மீட்டுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவு பதில் பொறுப்பதிகாரி ஜே.எஸ். ஏ.ஜெயசிங்க தெரிவித்தார்.

பொலிஸ் விசேட புலனாய்வு பிரிவுக்கு கிடைத்த தகவலொன்றின் அடிப்படையில், மட்டக்களப்பு மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவு பதில் பொறுப்பதிகாரி ஜே.எஸ். ஏ.ஜெயசிங்க தலைமையிலான பொலிஸ் குழுவினர், சம்பவதினமான இன்று அதிகாலை, மட்டக்களப்பு, திருகோணமலை வீதி வழியாக வந்த காரை நிறுத்தி சோதனை செய்தப்போது, மறைத்து வைக்கப்பட்ட நிலையில், 2 கிலோ 200 கிராம் கொண்ட கேரளா கஞ்சாவை அதிலிருந்து மீட்டுள்ளனர்.

குறித்த சம்பவத்தில் கைது செய்யப்பட்டவர்கள், பளை பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் எனவும் இவர்கள் கஞ்சா வியாபாரத்தில் நீண்டகாலமாக ஈடுபட்டு வந்துள்ளதாகவும் ஆரம்ப கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# இறுதி யுத்தத்தில் பொதுமக்கள் கொலை செய்யப்படவில்லை

நாட்டில் நடைபெற்ற இறுதி யுத்தத்தின்போது 45,000 பொதுமக்கள் கொலை செய்யப்பட்டதாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டை மறுப்பதாக எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் இன்று (வியாழக்கிழமை) நடைபெற்ற குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த குழுநிலை விவாதத்தில் சரத் பொன்சேகா மேலும் கூறியுள்ளதாவது, “இராணுவத்தில் புதிய நுட்ப பயற்சிகளை அளித்தமையே யுத்த



வெற்றிக்கு காரணமாகும்.

நான் தனிப்பட்ட முடிவுகளையும் பிரயத்தனங்களையும் மேற்கொண்டதனாலேயே, பயங்கரவாத்தை தோற்கடிக்க முடிந்தது.

யுத்தத்தை குறிப்பிட்ட காலத்தில் முடிவுக்கு கொண்டுவருவதாக நான் உறுதியளித்தேன். அதனை முடிவுக்கு கொண்டுவந்தேன். திட்டமிட்ட செயற்பாடுகளே அதற்குக் காரணமாகும்.

மேலும், இறுதி யுத்தத்தின்போது 45,000 பொதுமக்கள் கொலை செய்யப்பட்டதாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டை மறுக்கின்றேன்.சுமார் ஐந்து அல்லது ஆறு ஆயிரம் பேர் வரை தவறுதலாக உயிரிழந்திருக்கலாம்.

ஆனாலும், 270,000 பேரை பாதுகாக்க முடிந்தது.பயங்கரவாதத்தில் ஈடுபட்ட 12,000 பேருக்கு புனர்வாழ்வு அளிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் புனரவாழ்வு வழங்கப்பட்டவர்கள், மீளவும் பயங்கரவாதத்தில் ஈடுபடாதிருக்க நடவடிக்கை எடுக்க வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும்” என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# நந்திக் கடலில் மீனவரைக் காணவில்லை

முல்லைத்தீவு நந்திக்கடல் பகுதியில் மீன்பிடி நடவடிக்கைக்கு சென்ற ஒருவரை காணவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

புரேவி புயல் நேற்று மாலை வேளையில் முல்லைத்தீவு கரையூடாக கரையைக் கடந்துள்ள நிலையில் வடக்கு மாகாணத்தின் கடற்கரை பகுதிகள் மிகவும் கொந்தளிப்புடன் காணப்படுவதால் யாரும் மீன்பிடி நடவடிக்கைக்கு செல்லாதுள்ளனர்.

இந்நிலையில் முல்லைத்தீவு நந்திக் கடல் பகுதியில் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த ஒருவர் இதுவரை கரைதிரும்பாத நிலையில் அது தொடர்பில் முறையிடப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## பருத்தித்துறையில்...

அவர் கொழும்பு சென்று திரும்பிய நிலையில் குடும்பத்துடன் கடந்த 14 நாள்கள் சுயதனிமைப் படுத்தப்பட்டிருந்தனர்.

இந்த நிலையில் அந்த குடும்பத்தலைவரின் மாதிரிகள் இன்று யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் பிசிஆர் பரிசோதனைக்கு உள்படுத்தப்பட்டது. அவருக்கு கோரோனா வைரஸ் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது.

அதனால் அவர் யாழ்ப்பாணம் கோப்பாய் கல்வியற் கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள கோவிட் -19 சிகிச்சை நிலையத்துக்கு சிகிச்சைக்காக அனுப்பப்படவுள்ளார். அவரது குடும்பம் தொடர்ந்து சுயதனிமைப்படுவார்கள்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவ பீட ஆய்வுகூடத்தில் 70 பேருக்கும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் 336 பேருக்கும் பிசிஆர் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டன. அவர்களில் ஒருவருக்கு மட்டும் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

## புயலின் பின்னும்...

அமைக்கப்பட்டு 879 குடும்பங்களை சேர்ந்த 3189 நபர்கள் தங்கவைக்கப்பட்டுள்ளதாகவும், 48 வீடுகள் முழுமையாகவும், 1826 வீடுகள் பகுதி அளவிலும் சேதமடைந்துளதாகவும் ரீ.என்.சூரியராஜா குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பாக யாழ் மாவட்டத்தில் பருத்தித்துறை, சண்டிலிப்பாய் மற்றும் நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ளவர்களே அதிகமாக பாதிக்கப்பட்டுள்ளதாக ரீ.என்.சூரியராஜா தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## புரட்டிப்போட்டது...

தற்போது வரை மன்னார், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, திருகோணமலை ஆகிய 6 மாவட்டங்கள் இவ்வனர்த்த நிலையால் பாதிக்கப்பட்டுள்ளதோடு, ஒப்பீட்டளவில் யாழ்ப்பாணம், மன்னார் மாவட்டங்களே அதிக பாதிப்புக்களை சந்தித்துள்ளன.

அத்துடன் சுமார் 2500 வீடுகள் சேதமடைந்துள்ளன.

அத்துடன், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 152 வீடுகள், கிளிநொச்சி மாவட்டத்தில் 135 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளதாக இதுவரை கணக்கிடப்பட்டுள்ளது.

9 சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்கள் இதனால் சேதமடைந்துள்ளதாகவும் அடையாளம் காணப்பட்டுள்ளது.

மாவட்ட செயலாளர்கள், பிரதேச செயலகங்கள் ஊடாக உரிய நிவாரண நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

புரேவி புயலின் தாக்கத்தினால் யாழ் மாவட்டத்தில் 15 ஆயிரத்து 643 பேர் பாதிப்படைந்துள்ளதாக அரசாங்க அதிபர் க.மகேசன தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் தற்போதுவரை 4 ஆயிரத்து 605 குடும்பங்களை சேர்ந்த 15 ஆயிரத்து 643 நபர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்துள்ளார்.

மன்னார் மாவட்டத்தில் உள்ள 5 பிரதேசச் செயலாளர் பிரிவுகளிலும் 2236 குடும்பங்களைச் சேர்ந்த 7 ஆயிரத்து 749 நபர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு தெரிவித்துள்ளது.

இவ்வாறு பாதிக்கப்பட்டவர்கள் 15 நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளதோடு, உறவினர்களின் வீடுகளிலும் தங்கியுள்ளனர்.

இதேவேளை, புரவி சூறாவளியானது இலங்கையை விட்டு நகர்ந்த போதிலும் மழை நீடிக்கும் என்பதால் கொழும்பிலிருந்து காங்கேசன்துறை ஊடாக திருகோணமலை வரையான கடல் பிரதேசங்களுக்கு செல்ல வேண்டாமென, மீனவர்கள் உள்ளிட்ட கடற்றொழிலில் ஈடுபடுவோருக்கு, வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

## கிளைமோர் குண்டுடன்...

இவர்கள் நேற்று (புதன்கிழமை) கைது செய்யப்பட்டுள்ளதாகவும் குறித்த சந்தேகநபர், பையொன்றில் மிகவும் சூட்சமமான முறையில் இந்த குண்டை மறைத்து, கொண்டு சென்றுள்ளதாக பாதுகாப்பு பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

புலனாய்வு பிரிவினர் வழங்கிய தகவலுக்கு அமைய, பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் இணைந்து இந்த சுற்றி வளைப்பை மேற்கொண்டுள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் வலையமைப்பின் ஊடாகவே குறித்த நபருக்கு கிளைமோர் குண்டு வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சுவிஸர்லாந்திலிருந்து இலங்கையில் தாக்குதல் நடத்த திட்டமிடப்படுவதாக கூறப்படுகின்றது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை இலக்கு வைத்து, கிளைமோர் தாக்குதல் நடத்த திட்டமிடப்பட்டதாகவும் தகவல் கிடைத்துள்ளதாக பாதுகாப்பு பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டு யுத்தம் நிறைவுக்கு கொண்டு வரப்பட்டதன் பின்னர், வெளிநாடுகளிலிருந்து தாக்குதல் நடத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக புலனாய்வு பிரிவு தெரிவிக்கின்றது.

யுத்தம் நிறைவடைந்ததன் பின்னர், வெளிநாடுகளிலிருந்து இலங்கை மீது தாக்குதல் நடத்த முயற்சிக்கப்பட்ட 15வது சந்தர்ப்பம் இதுவென கூறப்படுகின்றது.

2014ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நெடுங்கேணி வனப் பகுதியில் இராணுவ தாக்குதலினால் உயிரிழந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினர் கோபியின் சகோதரர் ஒருவர் சுவிஸர்லாந்திலிருந்து, இலங்கை மீது தாக்குதல் நடத்த திட்டமிடுவதாக தகவல் கிடைத்துள்ளதென பாதுகாப்பு பிரிவினர் தெரிவிக்கின்றனர்.

இந்த கைக்குண்டினை கிழக்கு மாகாணத்திற்கு அனுப்பி வைக்க திட்டமிடப்பட்டிருந்ததாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது. மோட்டார் சைக்கிளில் வருகைத் தந்த ஒருவரினாலேயே, இந்த கிளைமோர் குண்டு தனக்கு கிடைத்துள்ளதாக அவர் வாக்குமூலம் அளித்துள்ளார்.

இந்த நடவடிக்கைகளுக்காக வெளிநாடொன்றிலிருந்து இவருக்கு பணம் வைப்பிலிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

எந்தவித சந்தேகமும் எழக்கூடாது என்பதற்காகவே, தனது 7 வயதான பிள்ளையையும் குறித்த பெண் தன்னுடன் அழைத்து சென்றுள்ளதாக கூறப்படுகின்றது.

குறித்த சந்தேகநபர்கள் யாழ்ப்பாணத்திற்கும், குண்டொன்றை கொண்டு சென்றுள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்த குழுவின் இலக்கு தொடர்பில் இராணுவ புலனாய்வு பிரிவு மற்றும் பொலிஸ் பயங்கரவாத தடுப்பு பிரிவு ஆகியன விசாரணைகளை ஆரம்பித்துள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இரணைதீவில்...

ஏற்பட்ட பாதிப்புக்கள் தொடர்பில் ஏற்பாடு செய்யப்பட்ட கலந்துரையாடல் இன்றுபிற்பகல் 2 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில்இடம்பெற்றது. குறித்த சந்திப்பை தொடர்ந்து கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ஊடக சந்திப்பொன்றை ஏற்பாடு செய்தருந்தார்.

குறித்த ஊடக சந்திப்பின்போது,

கிளிநொச்சி மாவட்டத்தில் தனித் தீவாக காணப்படுகின்ற இரணைதீவு பகுதியில் குடியேறி வாழ்ந்துவரும் மற்றும் தொழிலின் நிமித்தம் சென்று தங்கியிருப்போருமாக 88 குடும்பங்களை சேர்ந்த 131பேர் அங்கு இரு வேறு இடங்களில் தங்கியுள்ளனர்.

அவர்களது தேவைகள் தொடர்பிலும் பிரதேச செயலாளரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர்களுக்கான உடனடி அத்தியாவசிய பொருட்களை வழங்குவதற்கான கடல்வழி போக்குவரத்துக்கள் எதுவும் இல்லாத நிலையில் நிலமை நீடிக்குமாக இருந்தால் விமானப்படையினரின் உதவியை கோரி அதவர்கள் ஊடாக உடனடி அத்தியாவசிய பொருட்களை வழங்க கூடியதாக இருக்கும் என்றும் அதற்கான ஏற்பாடுகள் செய்யவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## கிளிநொச்சியில்...

குறித்த சம்பவத்தில் அப்பகுதியைச் சேர்ந்த தயானுஜன் அம்பிகா (35 வயது), சிங்கராஜா தயானுஜன் (29 வயது), செல்வநாயகம் ராசமலர் (வயது 67), குலசிங்கம் புவனேஸ்வரி (வயது 62) ஆகியோரே கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களை கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் முன்னிலைப்படுத்துவதற்கான ஏற்பாடுகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

மேலும் மீட்கப்பட்ட வெடிபொருட்கள், கிளிநொச்சி மாவட்ட பொலிஸ் நிலையத்துக்கு எடுத்து செல்லப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## வெள்ளத்தில் சிக்கிய...

குறித்த சம்பவம், கொடிகாமம் மத்தி, நாகநாதன் வீதியில் இன்று (வியாழக்கிழமை) காலை 8 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இந்நிலையில் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது, இன்று காலை 8 மணியளவில் கொடிகாமம் பொலிஸார் வீதியால் சென்றபோது, நபர் ஒருவர் மயக்கமடைந்த நிலையில் நீரில் கிடந்துள்ளார்.

அதனைத் தொடர்ந்து உடனடியாக அவரை மீட்ட பொலிஸார், அண்மையிலுள்ள மிருசுவில் நாவலடி வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர்.

பின்னர் மேலதிக சிகிச்சைக்காக அவர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளமை தெரியவந்துள்ளது.

குறித்த சம்பவத்தில் தவசிகுளம் கொடிகாமம் பகுதியைச் சேர்ந்த மாகாலிங்கம் மகேஷ் (வயது - 28) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

இந்நிலையில் சம்பவம் தொடர்பாக கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## ஊரெழு பொக்கணை...

எழுந்து பாய்கின்றன.

அதனால் இன்று வியாழக்கிழமை காலை முதல் பொக்கணை கிணறை அண்டியுள்ள பகுதி மக்கள் இடம்பெயர்ந்து வருகின்றனர்.

நிஷா புயல் வந்த போது ஏற்பட்ட நிலமை தற்போது புரேவி புயலுக்கும் ஏற்பட்டுள்ளது என்று மக்கள் சுட்டிக்காட்டினர்.

# புரவி புயல் - அடை மழையால்...


## நல்லூர் தெற்கு




## சாவகச்சேரி




## தொண்டைமானாறு




## நெடுங்கேணி வைத்தியசாலை




## சங்கானை





# புரவி புயல் - அடை மழையால்...

நீர்வேலி வாழைத்தோட்டங்கள்





வல்வெட்டித்துறை






ஏனைய பிரதேசங்களில்...





